மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

அசல் வழக்கு எண்.117/2020

2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் வாசா.1 சாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுவர், 1983-ம் ஆண்டு 54-வது சட்டப்பிரிவு 6(2) ஏற்பாட்டின் படி திருமதி.கே.ரேணுகாதேவி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருவேங்கடம் | வயது | : |
| த/பெ | :--- | சாதி | : |
| கிராமம் | :--- | சமயம் | : |
| தாலூக்கா | : | தொழில் | : |

முதல் விசாரணை

எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் என்னால் உண்மையாக சொல்லப்பட்டவை. அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

06.06.2005 தேதியில் 1-ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் (ஆவண எண்.1606/2005) சான்று நகல் வாசாஆ.1, 24.08.2005 தேதியில் 2-ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் (ஆவண எண்.2692/2005 ) சான்று நகல் வாசாஆ.2, 12.09.1997 தேதியிட்ட காளியப்பன் மகன் கே.சுப்பிரமணியன் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்று நகல் வாசாஆ.3, 06.06.2005 தேதியில் 2-ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி பத்மாவதி எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்று நகல் வாசாஆ.4, 22.06.2020 தேதியிட்ட தாவா சொத்து அயிட்டம் 1 மற்றும் 2-க்கான சிட்டா ரீ.சர்வே எண்.173/3-க்கான இணையதள நகல் வாசாஆ.5, 06.02.2020 தேதியிட்ட அயிட்டம் 1 மற்றும் 2 சொத்திற்கான பட்டா ரீ.சர்வே எண்.173/3-க்கான இணையதள நகல் வாசாஆ.6, 22.06.2020 தேதியிட்ட புல எண்.173/3-க்கான அ பதிவேட்டின் வட்டாட்சியர் அலுவலக இணைய தள நகல் வாசாஆ.7.

நீதிமன்ற கேள்வி

நான் தாவா சொத்தை புல எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் கார்பரேசன் வங்கியில் கடன் பெறுவதற்காக விண்ணப்பம் தாக்கல் செய்த போது தெரிய வந்தது. நான் சுமார் 6

மாதங்களுக்கு முன்பு கடனிற்காக வங்கியில் விண்ணப்பித்திருந்தேன். அந்த விண்ணப்பத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் செய்திருந்த விண்ணப்பத்தை வங்கி தாவா சொத்தின் புல எண் தவறாக உள்ளதென்பதற்காக திருப்பி கொடுத்துவிட்டார்கள். அந்த விண்ணப்பத்தை திருப்பிக் கொடுக்கும் போது அதில் எதற்காக திருப்பப்படுகிறது என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த வழக்கில் தாவா சொத்திற்கான வில்லங்க சான்று எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் இதற்கிடையில் சொத்து சம்மந்தமாக எந்தவொரு கடனும் வங்கியிலோ, தனிநபரிடமோ வாங்கவில்லை. புல எண்.95/2 யார் பெயரில் உள்ள விபரம் எனக்கு தெரியாது, அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் தவறான புல எண்ணை திருத்தம் செய்ய கோரி பிரதிவாதிகளிடம் நான் வாய்மொழியாக கேட்டுக் கொண்டேன். அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை. 1-ம் பிரதிவாதியின் வீட்டு முகவரி தெரியுமா என்றால் அவர் ரங்கசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறார். மல்லிகை நகர் என்பது ரங்கசமுத்திரம் அருகில் தான் உள்ளது.

குறுக்கு விசாரணை இல்லை.

(Sd.)Thiruvengadam
PW1

(Sd.)K.Renugadevi
District Munsif,
Sathyamangalam.